**O.S.No. 198/2022 நாள் 20.11.2025 PW 1– திருமதி.ராஜம்மாள்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (பிரதிவாதிகள்தரப்பில்)

என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் பாட்டி சொத்தில் பங்கு கேட்டுள்ளோம். எனது பாட்டி பெயர் என்னவென்றால் பொன்னாச்சி அம்மாள். இந்த சொத்து பொன்னாச்சி அம்மாளுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொன்னாச்சி அம்மாளுக்கு யாரெல்லாம் வாரிசுதாரர் என்றால் என் அம்மா பேச்சியம்மாள். பேச்சியம்மாளுக்கு எத்தனைபேர் வாரிசுதாரர் என்றால் 3 பேர் ராஜம்மாள், முத்தம்மாள், மாரிமுத்து. என் அப்பா பெயர் என்னவென்றால் பரமசிவம். என்அம்மா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான், எப்போது இறந்தார் என்றால் 2022 ஆம் ஆண்டு இறந்தார். எனது தகப்பனார் என் அம்மா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் திருமணம் முடிந்து தற்போது 43 வருடம் ஆகிறது. எனது சகோதரி 2ம் வாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு திருமணம் ஆகி ஒரு வருடம் கழித்து திருமணம் நடந்தது. எனது கணவர் என்ன வேலை பார்த்தார் என்றால் ஏரலில் பிஎஸ்என்எல் அலுவலகத்தில் வேலை பார்த்தார், தற்போது உயிருடன் இல்லை. எனது தங்கையின் கணவர் என்ன வேலை பார்த்தார் என்றால் தெரியவில்லை, எந்த ஊரில் இருக்கிறார் என்றால் திருமணம் ஆன நாளிலிருந்தே திருநெல்வேலியில்தான் இருக்கிறார். எனது கணவருக்கு சொந்த ஊர் ஏரல் என்றால் சரிதான். கதவு எண். 39 முதலிமார் கீழத்தெரு, ஏரலில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடுகட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கதவு எண்.5/1ல் குடியிருந்து வந்ததாக சொல்லியுள்ளேன் அது பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் குடியிருந்தோம். என் அம்மா 2022 ஆம் ஆண்டு இறந்தபிறகு 16 நாள் விசேசங்கள் நடந்தது என்றால் சரிதான். கடைசி நாள் விசேசத்தன்று குடும்பத்தார் எல்லார் முன்னிலையிலும் சொத்தை பற்றி பேசியபோது 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தை தாயார் பேச்சியம்மாள் உயில் ஆவணத்தின் மூலம் கொடுத்துவிட்டதாக சொன்னார்களா என்றால் ஆமாம். 1993 ஆம் ஆண்டே என் அம்மா உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். என் அம்மா 1993 ஆம் ஆண்டு உயில் எழுதிய நாள் முதல் இறக்கும்வரை நல்ல நிலையில்தான் இருந்தார் என்றால் கொஞ்சநாள் நன்றாக இருந்தார், அதன்பிறகு சுகமில்லை. என்அம்மா உயில் ஆவணம் எழுதிவைத்த காலகட்டத்தில் என் அப்பா உயிருடன்தான் இருந்தார் என்றால் சரிதான். பொன்னாச்சிஅம்மாள் அந்த இடத்தை வாங்கும்போது இந்த இடம் எப்படி இருந்தது என்றால் நாங்கள் பிறக்கும்போதே வீடுதான் இருந்தது. அதில் எத்தனை வீடுஇருந்தது என்றால் 3 வீடுகள் இருந்தது. 3 வீடுகள் எப்படி இருந்தது என்றால் ஒரு காரைவீடு, 2 ஓட்டடுக்கு வீடுகள். வழக்கில் உள்ள

தபசில் கதவு எண். 5/1 மாடிவீடு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் பாகப்பிரிவினை எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து கேட்டோம் என்று சொல்லியுள்ளோமா என்றால் கேட்டோம், ஆனால் சொல்லவில்லை. பட்டா எண். 936 தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. என்அப்பா என்ன வேலை பார்த்தார் என்றால் தறிநெய்வார். எங்களுக்கும், எனது சகோதரிக்கும் திருமணம் செய்து வைத்தது எனது தகப்பானார்தான் என்றால் சரிதான். 45 ஆண்டுகளுக்கு முன்பு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்றால் இரண்டுபேருக்கும் 5 பவுன் போட்டார்கள். திருமணத்திற்கு தொடர்ச்சியாக சீர்சீராட்டுக்கள் எல்லாம் செய்தார்கள் என்றால் கொஞ்சம் கொஞ்சம் செய்தார்கள். தபசில் சொத்து 5 ஆம் நம்பர் வீட்டை யார் கட்டினார் என்றால் 1ம் பிரதிவாதி மாரிமுத்துதான் கட்டினார். மாரிமுத்துவிற்கு முழு பாத்தியஸ்தை இருப்பதால்தான் அவர் தபசில் சொத்தில் மாடி கட்டியுள்ளார் என்றால் இல்லை, மாடி கட்டியது எங்களுக்கு தெரியாது. என் அப்பா, அம்மா இறப்பின்போது மாரிமுத்துதான் குடியிருந்து வந்தார் என்றால் இல்லை, நாங்கள்தான் இருந்தோம். மாரிமுத்துஎங்கு குடியிருந்தார், நான் எங்கு குடியிருந்தேன் என்றால் நான் அம்மாவீட்டிற்கு பக்கத்தில் கதவு எண். 5/1ல் குடியிருந்தேன். வழக்குரையில் தபசில் கதவு எண்.5/1 மாடிவீடு என்று சொல்லிவிட்டு வழக்கிற்காக கதவு எண். 5/1ல் குடியிருந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாரிமுத்து அப்பா, அம்மாவுடன் அந்த வீட்டில்தான் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல, அவர் வெளியூரில்தான் இருந்தான். மாரிமுத்து என் அப்பா இறந்தபிறகுதான் ஏரலுக்கு வந்தான். என் அப்பா இறந்து கிட்டத்தட்ட 28 வருடம் என்அம்மா இருந்தார்என்றால் சரிதான். நாங்கள் ஒரேதெருவில் குடியிருந்து வந்ததால் அவ்வப்போது சென்று பார்த்து வருவோம். வில்லங்கசான்றிதழ் பார்த்ததில் நிறைய நடவடிக்கைகள் இருந்தது என்று சொல்லியுள்ளநிலையில், அந்த வில்லங்கசான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வில்லங்கசான்றிதழை தாக்கல் செய்தால் 1993 ஆம ஆண்டே என் அம்மா எழுதிக்கொடுத்த உயில் மூலமே மாரிமுத்துவிற்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்துதான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு இந்த சொத்து என்அம்மா எழுதிக்கொடுத்த உயில் மூலம் பாத்தியப்பட்டது என்று என்அம்மா 16 ஆம் நாள் விசேசத்தில் தெரிந்தபின்பு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நானும், எனது சகோதரியும் தனித்தனியாக குடியிருந்து வந்துவிட்டு நாங்கள் ஒன்றாகத்தான் இருந்தோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தபசில் சொத்து உயில் மூலம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் நாங்கள் பாகப்பிரிவினை கேட்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றுசொன்னால் சரியல்ல.